திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு.ஜெ.நாராயணன், எம்.காம்.,

ந.க.அ2/4922/2022 நாள் : 17.04.2025

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணித்தொகுதி – திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகு – நேரடி நியமன உதவியாளர் – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் அடங்கிய குரூப் – II தேர்வு (நேர்முக தேர்வு அல்லாதது) மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவங்கியும் ஆணையிடப்படுகிறது.

படிக்க :
1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1022/PSD–A2/2024, நாள்: 28.06.2024 மற்றும் 21.08.2024.
2. திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ2/4922/2022, நாள்:15.07.2024, 31.07.2024 மற்றும் 10.09.2024.
3. சம்பந்தப்பட்ட நபர்களின் பணிப் பதிவேடு.

*****

ஆணை :

பார்வை 1–இல் காணும் கடிதங்களில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் நடத்திய ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு குரூப்–II (குரூப்–IIA பணிகள்) (நேர்காணல் அல்லாத)–ன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகிற்கு 26 நேரடி நியமன உதவியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2) பார்வை 2–இல் காணும் திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வுசெய்யப்பட்ட 26 நேரடி நியமன உதவியாளர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டு தற்போது வரை பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் கீழ்கண்ட 17 நபர்களின் பணியினை அவர்களுக்கு எதிரே கலம் 4–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் உதவியாளர் பணியமைப்பில் வரன்முறை செய்தும் பணிவரன்முறை செய்த நாள் முதல் தகுதிகாண் பருவம் துவக்கியும், இவர்களது தகுதிகாண் பருவம்

மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டுகாலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி (ம) பணிப்புரியும் அலுவலகம். (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்த நாள் | தமிழ்நாடு அமைச்சுப்பணியில் முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | கு.நர்மதா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருப்பத்தூர். | 29.07.2024 மு.ப. | 29.07.2024 மு.ப. |
| 2 | சூ.பொழில் முகிலன்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>நாட்றம்பள்ளி | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 3 | க.ஜீவா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆம்பூர் | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 4 | ப.பானுமதி<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வாணியம்பாடி. | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 5 | தி.பாலமுருகன்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வாணியம்பாடி. | 14.08.2024 மு.ப. | 14.08.2024 மு.ப. |
| 6 | பூ.கார்த்திகேயன்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆம்பூர். | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 7 | இர.ஹரிதாஸ்ரீ<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>திருப்பத்தூர். | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |

| | | | |
|---|---|---|---|
| 8 | ச.விஜய்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>நாட்றம்பள்ளி. | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 9 | கு.அருணகிரி<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>நாட்றம்பள்ளி. | 20.07.2024 மு.ப. | 20.07.2024 மு.ப. |
| 10 | க.மு.இளங்கோ<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>நாட்றம்பள்ளி. | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 11 | சு.மோனிகா ரோசலிண்ட்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்<br>பாதுகாப்பு அலுவலகம், திருப்பத்தூர். | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 12 | கு.ம.பிரியகுமாரி<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>நாட்றம்பள்ளி. | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 13 | கு.இலக்கியா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>ஆம்பூர். | 15.07.2024 மு.ப. | 15.07.2024 மு.ப. |
| 14 | து.பிரவீன்குமார்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருப்பத்தூர். | 19.07.2024 மு.ப. | 19.07.2024 மு.ப. |
| 15 | சா.கிபாயதுல்லா<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருப்பத்தூர். | 19.07.2024 மு.ப. | 19.07.2024 மு.ப. |
| 16 | ச.ராம்பிரசாத்<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,<br>திருப்பத்தூர். | 01.08.2024 மு.ப. | 01.08.2024 மு.ப. |
| 17 | சு.கார்த்திக்,<br>முதுநிலை வருவாய் ஆய்வாளர்.<br>உதவி ஆணையர் (கலால்)<br>அலுவலகம், திருப்பத்தூர். | 01.08.2024 மு.ப. | 01.08.2024 மு.ப. |

3) தமிழ்நாடு அமைச்சுப்பணிக்கான சிறப்பு விதி 38(B)(2)–ன் இணைப்பு 9–இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதி 8–ன் படி, மாவட்ட வருவாய் அலகில் நேரடி நியமன உதவியாளர்களாக பணிபுரியும் ஒவ்வொரும் அப்பணியமைப்பில் தகுதிகாண் பருவகால முடிவுக்குள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

I. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இரண்டு மாத காலம் அடிப்படை பயிற்சி பெற்று பயிற்சி முடிவில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
II. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத்தேர்வுகளான வருவாய்த்துறை பாகம் –1, பாகம் – 2 மற்றும் பாகம் – 3 ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
III. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வருவாய்த்துறை துறைத்தேர்வுகள் அனைத்திலும் தேர்ச்சி பெற்றவுடன் அடுத்து நடைபெறும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சி அணியில் நான்கு வார கால நில அளவை பயிற்சியும், ஒருவார கால நிலவரித்திட்ட பயிற்சியும் பெற்று பயிற்சி முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

5. திருப்பத்தூர் மாவட்ட வருவாய் அலகில் பணிபுரியும் மேற்படி 17 நேரடி நியமன உதவியாளர்களும் தகுதிகாண் பருவ கால முடிவுக்குள்ள மேலே பத்தி–3 இல் I மற்றும் II –இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கண்டிப்பாக பெற்றிட வேண்டும். இவர்கள் அனைத்து வருவாய்த்துறைத் தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று முடிந்தவுடன் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டப் பயிற்சிகள் அளிக்கவும் இவ்வலுவலகத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே இவர்கள் அனைவரும் வருவாய்த்துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற்று உடனுக்குடன் தத்தமது அலுவலகத்தலைவருக்கு தெரிவித்து பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் செய்திடச் செய்யுமாறு அனைத்து நேரடி நியமன உதவியாளர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இப்பணி வரன்முறையானது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது.

***"The regularization is subject to the outcome of W.A.(MD) No.181 of 2023 & C.M.P (MD) No.2247 of 2023 pending before the Hon'ble Madurai Bench of Madras High Court and other cases if any pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of Madras High Court relating to this recruitment"***

6. இவர்களின் பணி வரன்முறைப்படுத்தப்பட்டது மற்றும் தகுதிகாண் பருவம் தொடங்கி ஆணையிடப்பட்டது போன்ற விவரங்கள் அனைத்தையும் தனியர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து இவ்வலுவலகத்திற்கு அறிக்கையினை உடன் அனுப்பி வைக்குமாறு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓம்/-ஜெ.நாராயணன்,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திருப்பத்தூர்.

//உத்தரவுப்படி//

17/4/2025

அலுவலக மேலாளர் (பொது),

1/4

17/04/25

<u>பெறுநர்</u>:-
சம்மந்தப்பட்ட நபர்கள் - சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலமாக

**நகல் :**
கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-05
**நகல் :** அனைத்து வட்டாட்சியர்கள்- இரட்டை நகலில் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு சார்வு செய்து நகலனுப்புக.
**நகல் :** கணக்கு பிரிவு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருப்பத்தூர்.
**நகல்:** அ2-இருக்கைக்கு.